**மூன்றாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோயம்புத்தூர்**

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் வியாழக்கிழமை 09-ம் நாள் இந்த சாட்சியின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது ஏற்பாட்டின்படி) **திருமதி.B.தீப்கா, பி.ஏ.,பி.எல்., (Hons)** மூன்றாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| தேதி | - | 09.10.2025 |
| அசல் வழக்கு எண் | - | 1058/2016 |
| பெயர் | - | சிவசாமி - **பி.சா.1** |
| தகப்பனார் பெயர் | - | பழனியப்ப கவுண்டர் |
| வயது | - | |
| பாலினம் | - | ஆண் |
| முகவரி | - | |
| தொழில் | - | |

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**:-

1) தாவா சொத்திற்கும் என் இடத்திற்கும் தென்புறமாக க.ச.எண். 198 காலை பூமி அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். இறுதியாக தாவா சொத்தில் வாதி வீடு கட்டியுள்ளார் என்று சொன்னால் சரிதான். தாவாசொத்து பெரியநாயக்கன் பாளையம், பேரூராட்சி எல்லையில் அமைந்துள்ளது. வாதி இவ்வழக்கில் தாக்கல் செய்த ஆவணங்களைப் பார்த்து தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். வாதி

வா.சா.ஆ. 6 -ன் படி தாவா சொத்தில் கட்டிடம் கட்டியுள்ளார் என்று சொன்னால் கட்டிடம் கட்டியுள்ளார். ஆனால் வா.சா.ஆ. 6 -ல் குறிப்பிடப்பட்டுள்ள தாவா சொத்திற்குரிய அளவு தவறாகும்.

2) வா.சா.ஆ. 6 -ல் தாவா சொத்தின் மேல்புற அளவு 31.3 அடி என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால் அந்த அளவு தவறானதாகும். வா.சா.ஆ. 1 மற்றும் வா.சா.ஆ. 13 -லும் மேற்கூறிய அளவு தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால் அந்த அளவு தவறானதாகும். வா.சா.ஆ. 6 -ல் தாவா சொத்திற்குரிய கிழமேல் வடபுறம் 76 அடி மற்றும் கிழமேல் தென்புறம் 80 அடி என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால் அந்த அளவுகள் தவறானதாகும். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் இருக்கும் கட்டிடம் தான் வாதி கட்டியுள்ள கட்டிடம் என்று சொன்னால் சரிதான். அந்த புகைப்படங்கள் **வா.சா.ஆ. 15** மற்றும் **16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வருவாய்த்துறை ஆவணங்கள் படி வாதியினுடைய கட்டிடம் மேல்புறம் சுவர் 66 அடி நீளம் அளவு கொண்டு கட்டப்பட்டுள்ளது.

3) தாவா சொத்திலிருக்கும் வீட்டின் மேல்புற சுவரை தாண்டி இருக்கும் உயிர் வேலியை வாதிதான் பயன்படுத்தி வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேல்புறம் சுவரை தாண்டி இருக்கும் பூச்செடிகளை நான் தான் நட்டுவைத்து பராமரித்து வருகிறேனா என்றால் இல்லை. மேல்புறம் சுவரை தாண்டி இருக்கும் முருங்கை மரத்தை வாதி தான் பராமரித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. மேற்கூறிய மரத்தை நான் பராமரித்து வருகிறேனா என்று கேட்டால் இல்லை. என் சொத்திற்கு கிழபுறத்தில் உயிர்

வேலி அமைந்துள்ளது என்றால் இல்லை. வாதி வீட்டிற்கு மேல்புறத்தில் மட்டும் தான் உயிர் வேலி அமைந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல.

4) வாதி வீட்டிற்கு மேல்புறத்தில் உயிர் வேலி அமைந்துள்ளது என்றும் வழக்கிற்காக இல்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய இடத்திற்கு வடபுறம் மற்றும் வாதி வீட்டிற்கு மேல்புறத்தில் உயிர் வேலி அமைந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதி வீட்டின் மேல்புற சுவரை தாண்டி இருக்கும் 11 அடி அளவு கொண்ட காலியிடம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வாதி வீட்டினுடைய சன் ஷேடு அச்சொத்தின் மேல்புறத்தில் நீட்டியுள்ளது என்று சொன்னால் சரிதான் ஆனால் அது அவருடைய இடத்தில் இல்லை. ஆக்கிரமிப்பு செய்து சன் ஷேடு நீட்டப்பட்டுள்ளது.

5) வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்திற்குரிய பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளும், அச்சொத்திற்குரிய வருவாய் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளும் மாறுபட்டுள்ளது என்ற வாதத்தைக் கொண்டு தான் இவ்வழக்கை வழக்காடுகிறேன் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ. 13, 1, 3 ஆவணங்களில் தாவா சொத்தின் அளவுகள் கிழமேல் வடபுறம் 76 அடி மற்றும் கிழமேல் தென்புறம் 80 அடி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால் அந்த அளவுகள் தவறானதாகும். மேற்கூறிய ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகள் தவறு என்றும், வருவாய்த்துறை ஆவணங்களில் கண்டுள்ள அளவுகள் தான் சரி என வழக்காடுகிறேன் என்று சொன்னால் சரிதான்.

Initial
III ADM, Cbe

6) கடந்த 1979 ஆண்டிலிருந்து தாவா சொத்திற்குரிய உரிமையாளர்கள் அனைவரும் மேற்கூறிய அளவு சொத்தை தான் சுவாதீனத்தை வைத்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். நான் பிரிக்கால் நிறுவனத்தில் பணியிலிருந்தேன். தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். நான் ஒரு கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ளதால் என்னை பணிநீக்கம் செய்துவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. கடந்த 2016 -ம் ஆண்டு ஜீலை மாதம் தாவா சொத்தில் வேலி அமைப்பதற்கு எனக்கும், வாதிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். அதைத் தொடர்ந்து வாதி என் மீது பெரியநாயக்கன்பாளையம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்கள் என்று சொன்னால் சரிதான். அப்புகாரைக் குறித்து போலீசார் விசாரித்தார்கள் என்று சொன்னால் சரிதான்.

7) மேற்கூறிய பிரச்சனை உரிமையியல் பிரச்சனை என்பதால் உரிமையியல் நீதிமன்றத்தை அணுகும்படி கூறினார்கள் என்று சொன்னால் சரியல்ல. அந்த புகாரின் அடிப்படையில் குற்றவியல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. இருதரப்பினர்களும் பேசி பிரச்சனையை தீர்த்துக்கொள்ளும்படி கூறினார்கள். தாவா சொத்தில் இருக்கும் வாதியின் சுவாதீனத்திற்கு நான் இடையூறு செய்ததால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை ஆவணங்களின் அடிப்படையில் சுவாதீனத்தில் உள்ளார் என்றும் அதற்கு நான் இடையூறு செய்வதற்கு எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**
**மறு விசாரணை இல்லை.**

Initial
III ADM, Cbe

ஒம்/- திருமதி.B.தீப்கா பி.ஏ., பி.எல்.,(Hons)
மூன்றாவது கூடுதல் மாவட்ட
உரிமையியல் நீதிபதி,
கோயம்புத்தூர்.

Initial
III ADM, Cbe